திருவள்ளுவர் வாழ்த்துகிறார்!

தமிழ் மொழியின்
பெரும் கிழவா !
உலகிற்கு
பொதுமறை
தந்த உழவா !

தமிழர்
உயிரெழுத்தே
திருவள்ளுவா !
பாலத்தின்
பெருமை
எழுது..வா !

கலைஞரால்
எடுக்கப்பட்ட
சிலையே
வெள்ளி விழா
உனக்கு !

மு.க.ஸ்டாலின்
வாரிசுகளே
நூற்றாண்டு விழா
நடத்தும் என்பது
என் கணக்கு !

கன்னியாகுமரி
மாத்தூர்
தொங்கு பாலம்
அசந்து
பார்க்கிறது !

கடலின் காற்று
புதிய
காதலி வந்தாள்
என பாலத்தை
மயங்கி
ரசிக்கிறது !

சீனாவில்
சோங்கிங் மற்றும்
சாங்சா நகர்
இணைக்கும்
சிடு. பாலம்
அருமையானது !

சோழன் பேரன்
கலைஞர் மகன்
மு.க.ஸ்டாலின்
கட்டிய
கண்ணாடிப் பாலம்
அழகானது !

பாலத்தைத்
தழுவி
நழுவிச் செல்லும்
அலையே
பாம்பன் பாலம்
பொறாமைப்
படுகிறதா ?

பாலங்களின்
நாயகன்
மு.க. ஸ்டாலின்
ஆளுமை
தெரிகிறதா !

திருக்குறள்
கண்காட்சி
வரலாற்று மாட்சி !

வெள்ளி விழா
மலர்
நாளை
அத்தாட்சி !

கடல் வறண்டாலும்
வள்ளுவர் சிலை
இருக்கும் !

அப்போதும்
முத்தமிழ் அறிஞர்
கலைஞர் பெயர்
சிறக்கும் !

கண்ணாடி
பாலத்தில்
தமிழினம்
நடக்கும்!

முக ஸ்டாலின்
புகழ்க் கொடி
பறக்கும் !

தாராசுரம் கோவில்
சோழன் புகழுக்கு
அன்று !

கடல் மேல் கண்ணாடி
இழைப் பாலம்
மு.க.ஸ்டாலினுக்கு
இன்று !

கலைஞரின்
பூம்புகார்
தோரண வாயில்
அன்று !

திருவள்ளுவர்
தோரண வாயில்
தலைவர்
மு.க.ஸ்டாலினுக்கு
இன்று !

திருவள்ளுவர்
வாழ்த்திப் பாடுகிறார்
தலைவரை
நின்று !

கவிஞர்
ஈரோடு இறைவன்
கழக - இலக்கிய அணி
இணைச் செயலாளர்

அரசுக்கு எதிரான அவதூறுகளை முறியடிக்க வாசிப்பும் எழுத்தும் பேச்சும் முக்கியம்!

சென்னை, ஜன 1-

சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சியை முத்தமிழறிஞர் பதிப்பகம் நடத்தி வருகிறது. தி.மு.க. செய்தித் தொடர்பாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி உடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில், வாசகர்கள் பலரும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

வாசகர்களிடையே பேசிய சூர்யா கிருஷ்ண மூர்த்தி, "பேச்சையும், எழுத்தையும் கழித்துவிட்டால் திராவிட இயக்கம் என்ற ஒன்றே இருந்திருக்க முடியாது. பேச்சையும், எழுத்தையும் வைத்துதான் இந்த இயக்கம் சாதித்த அனைத்து மாற்றங்களும் நடந்தேறியது. அரை நூற்றாண்டுக்கு முன்பு வரை எழுதுவதற்கும், பேசுவதற்கும் பலர் இருந்தனர். ஆனால் அவர்களுக்கு எழுதவும், பேசவும் வாய்ப்பு அவ்வளவு எளிதில் கிடைக்கவில்லை. பல்வேறு சமூகத்தடைகள், நேரடித் தாக்குதல்கள் இருந்தன. அவற்றையெல்லாம் சமாளித்துதான் திராவிட இயக்கத் தலைவர்கள் எழுதவும், பேசவும் துணிந்து முன்வந்தனர்.

ஆனால் இன்றைக்கு யார் வேண்டுமானாலும் எழுதலாம், பேசலாம். அதற்கான சூழல் இருக்கிறது. சிந்தனை இருந்தால் போதும், யார் வேண்டுமானாலும் பேசலாம் என மேடையை வழங்கியிருக்கிறது 'என் உயிரினும் மேலான' பேச்சுப்போட்டி. யார் வேண்டுமானாலும் எழுதலாம் என்ற வாய்ப்பை முரசொலி பாசறைப் பக்கம் சாத்தியப்படுத்தியிருக்கிறது. இதன் அடுத்தகட்டமாக உருவாகியிருப்பதுதான் முத்தமிழறிஞர் பதிப்பகம். இந்த நூல்களையும், தி.மு.க. வரலாறு சார்ந்த மற்ற பல நூல்களையும் இன்றைய இளம் தலைமுறை வாசிக்க வேண்டும்.

அதன்மூலம் நீங்களும் பேச்சாளர்களாக, எழுத்தாளர்களாக உருவெடுக்க வேண்டும். குறிப்பாக சமூக வலைத்தளங்களில் எழுத, பேச வேண்டும். ஏனென்றால் இன்றைய சூழலில் அச்சு, தொலைக்காட்சி ஊடகங்களை விட செய்திகள் அதிகம் பரவும் இடம் சமூக வலைத்தளங்கள்தான். இன்றைய இளம் தலைமுறையினர் அங்கேதான் இருக்கிறார்கள். தி.மு.கழகத்திற்கு எதிரான அவதூறுகளும் எதிரிகளால் திட்டமிட்டு சமூக ஊடகங்களில்தான் பரப்பப்படுகிறது. ஆட்சிக்கு எதிராக, எந்த குறையும் சொல்ல முடியாத சூழலில், தனிநபர் சிக்கல்களை சட்ட ஒழுங்கு சிக்கலாக திசைதிருப்பும் சூழ்ச்சிகள் அங்கேதான் நடக்கின்றன. அவற்றை முறியடிக்க நமக்கு வாசிப்பு அவசியம். இந்த இயக்கத்தின் மீதான அவதூறுகளை முறியடிக்க வாசித்ததை பேசுவதும், எழுதுவதும் மிக மிக அவசியம்" எனக் கூறினார்.

வாசர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கும் எளிமையான முறையில் விளக்கம் அளித்தார்.

- **சூர்யா கிருஷ்ணமூர்த்தி**

கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகளுக்கு!

வாகை சந்திரசேகர் வேண்டுகோள்!

சென்னை, ஜன. 1 -

கழக கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகளுக்கு மாநிலத் தலைவர் வாகை சந்திரசேகர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு: -

நில நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதற்கு இணங்க மாநில அளவிலான ஒப்பித்தல் போட்டி வரும் 4.1.2025 அன்று அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற உள்ளது. இதனை பள்ளிகளுக்கு தெரிவிக்கவும், மேலும், போட்டி நடத்தாமல் உள்ள மாவட்டங்களில் நடத்தி முடித்திடவும் வேண்டுகிறேன்.

மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட மூன்று மாணவர்களையும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் காலை 9 மணிக்குள் அரங்கத்திற்கு அழைத்து வர வேண்டுகிறேன். இவ்வாறு தலைவர் - கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

கல்லூரி மாணவியரிடமும் – அவர்களின் பெற்றோர்களிடமும்

அச்ச உணர்வை ஏற்படுத்தும் வகையில் எடப்பாடி பழனிசாமி நடந்து கொள்வது அருவருக்கத்தக்க செயல்!

சமூகநலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

சென்னை, ஜன. 1 -

கல்லூரி மாணவியரிடமும் அவர்களின் பெற்றோர்களிடமும் அச்ச உணர்வை ஏற்படுத்தும் வகையில் எடப்பாடி பழனிசாமி நடந்து கொள்வது அருவருக்கத்தக்க செயல் என்று சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

எங்கே எது நடக்கும். அதில் நமக்கென்ன அரசியல் ஆதாயம் கிடைக்கும் என அலைந்து கொண்டிருக்கும் பழனிசாமி, படிக்க வரும் கல்லூரி மாணவர்களிடமும் அவர்களின் பெற்றோர்களிடமும் தேவையின்றி அச்ச உணர்வை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டிருப்பது உண்மையிலேயே அருவருக்கத்தக்க செயல்.

வதந்திகள் பரப்பும் பழனிசாமி!

உயர்நீதிமன்றத்திலேயே தமிழ்நாடு அரசு உரிய பதில் அளித்துவிட்ட போதும் தனது சுய அரசியல் ஆதாயத்திற்காக இல்லாத ஒன்றை இருப்பது போல மேலும் மேலும் வதந்திகளை பரப்பிக் கொண்டிருக்கும் பழனிசாமிக்கு கடும் கண்டனம்.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமையில் பின்னிருந்த அ.தி.மு.க. பிரமுகர்களை காப்பாற்றவும் அ.தி.மு.க. இளைஞரணியின் பொள்ளாச்சி நகரச் செயலாளராக செயல்பட்டு வந்த முக்கிய குற்றவாளி அருளானந்தத்தை காப்பாற்றவும் பாதிக்கப்பட்ட பெண்களையே அ.தி.மு.க.வினர் பகிரங்கமாக மிரட்டிய கொடூரம் நடந்ததை தமிழ்நாட்டு மக்கள் என்றும் மறக்கவே மாட்டார்கள்.

அதுமட்டுமா? உதவி கேட்டு வந்த பெண்ணை "மெயின் ரோட்டிற்கு வா" என முன்னாள் அ.தி.மு.க. அமைச்சரே பேசி பாலியல் தொந்தரவு கொடுத்த அசிங்கமும் அ.தி.மு.க. ஆட்சியில் தானே அரங்கேறியது. இந்த லட்சணத்தில் ஆட்சி நடத்தி விட்டு தற்போது பெண்கள் நலனில் அக்கறை கொண்டவர் போல நடிப்பது அபத்தம்.

புதுமைப்பெண் திட்டம், பெண்கள் விடியல் பயணம், மகளிர் உரிமைத் தொகை என பெண் கல்விக்கும், பெண்கள் முன்னேற்றத்திற்கும் ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்து பார்த்து செய்துவரும் திராவிட மாடல் ஆட்சி மீதும் முதலமைச்சர் மீதும் என்ன அவதூறு பரப்பினாலும் அதை தமிழ்நாட்டு பெண்கள் துளியும் நம்பபோவதில்லை.

எப்.ஐ.ஆர். பதிவு செய்யாத பழனிசாமி அரசு!

எடப்பாடி ஆட்சியில் தனக்கு நேர்ந்த பாலியல் கொடுமைகளை வெளியே வந்து சொல்லவே பயப்பட்ட நிலை இருந்தது. புகார் பெறவே மாட்டார்கள், ஒருவேளை புகாரை பெற்றுக்கொண்டாலும் எப்.ஐ.ஆர். பதிவு செய்ய மாட்டார்கள். அந்த நிலை மாறி தற்போது திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் தைரியமாக வெளியே வந்து தங்களுக்கு நேர்ந்த கொடுமையை சொல்கிறார்கள் என்றால் அது முதலமைச்சர் மீது தமிழ்நாட்டு பெண்கள் வைத்துள்ள நம்பிக்கை தான். அந்த நம்பிக்கையை இந்த திராவிட மாடல் அரசு என்றும் காக்கும்.

அரசியல் அறத்திற்கு குழி தோண்டும் பழனிசாமி!

மாணவியின் புகாரை பெற்ற உடனே எவ்வளவு விரைவாக செயல்பட்டு விசாரணை நடத்தி குற்றவாளி உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளான் என்பது இந்த நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும். தேவையின்றி அரசியல் செய்வதையும் வதந்திகளை பரப்பி மாணவிகளின் கல்வியோடு விளையாடுவதையும் நிறுத்தி கொள்ளுங்கள்.

நீங்கள் என்னதான் அச்சுறுத்தி பெண்களை வெளியே வராதே, படிக்க வராதே என மறைமுகமாக தடுக்க முயன்றாலும் தமிழ்நாட்டு பெண்கள் தைரியமாக வெளியே வந்து வாழ்வின் உயர்நிலைக்கு செல்வார்கள். அதற்கு இந்த திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும்.

தனக்கு விளம்பரம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், படிக்கும் மாணவர்கள் சார்ந்த இந்த சென்ஸிட்டிவ் விவகாரத்தில் அரசியல் செய்து, அரசியல் அறத்தையும் மாண்பையும் குழி தோண்டி புதைத்து விட்டார் பழனிசாமி. அவரது இந்த அற்பத்தனமான செயலை தமிழ்நாட்டு மக்கள் என்றும் மன்னிக்க மாட்டார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வழக்கறிஞர் சூர்யாவெற்றிகொண்டான் பங்கேற்பு

கடலூர் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் சி.வெ.கணேசன், சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கடலூர், ஜன.01-

கடலூர் மேற்கு கழக மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நெய்வேலி என்.எல்.சி தொ.மு.ச அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தொழிலாளர் நலம் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். கடலூர் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் அருள்குமார், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் வழக்கறிஞர் பாரிஇப்ராகிம் முன்னிலை வகித்தனர். கழக சட்டத்துறை இணை செயலாளர் வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான், நெய்வேலி சட்ட மன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில் ஜனவரி மாதம் 18ஆம் தேதி நடைபெற உள்ள மாநில மாநாட்டில் திரளாக கலந்துகொள்ள வேண்டும், மேலும் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறுவதற்கு வழக்கறிஞர்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என பேசினர். இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர் சங்க மாவட்ட துணைத் தலைவர் இராம் சிங், மாவட்ட துணை அமைப்பாளர்கள் பரணி சந்தர், ரவிச்சந்திரன், இளங்கோவன், வெற்றிச் செல்வன், அரசு வழக்கறிஞர்கள் சிலம்பரசன், அரிதாஸ், கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பண்ருட்டி, நெய்வேலி, விருத்தாச்லம்,திட்டக்குடி ஆகிய பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் தலைமைக் கழக வழக்கறிஞர் நாகை தினேஷ்குமார் நன்றி கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இரா. நாகரத்தினம்
சனவரி 1 (2024)

கழகம் துவக்கப்பட்ட போதே, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, காடையாம்பட்டி பகுதியில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.

ஓமலூர் வட்டச் செயலாளர், காடையாம்பட்டி ஒன்றிய பொறுப்பாளர் என கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

பூசாரிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர், காடையாம்பட்டி ஒன்றியக்குழு துணைத் தலைவர், காடையாம்பட்டி ஊரக வளர்ச்சி வங்கி தலைவர், தீவட்டிப்பட்டி வேளாண்மை பொறியியல் சேவை கூட்டுறவு சங்க தலைவர், சின்னதிருப்பதி கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் என பல்வேறு பதவி வகித்தவர்.

மொழிப் போர் தியாகியான இவர், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜெயமங்கலம் பி. அய்யாவு
சனவரி 1 (1999)

தேனி மாவட்டம், பெரியகுளம் ஒன்றியப் தி.மு.க. பொறுப்பாளராக பணியாற்றியவர்.

ஜெயமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – தேனி கூட்டுறவு விற்பனை சங்க இயக்குநராகவும் – பெரியகுளம் கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் மற்றும் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.